பெறுகிற வகையில் தாட்கோ மூலமாகத்தான் அவர்கள் விண்ணப்பிக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாட்கோ சேர்மென்-உடன் கலந்து பேசி இரண்டு சலுகைகளையும் அவர்கள் பெறுகிற வகையில் ஒரு கூட்டுக் கூட்டத்தை நடத்தி இதைப்பற்றி விவாதித்து முடிவெடுத்து கரூர் பகுதியில் வாழ்கிற ஆதிதிராவிடர்கள் பயன்பெறுகிற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருடைய கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்கும் என இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில்* உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

2. தகவல் கோரல்.

8—2—1993 அன்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சிலர் அவையிலிருந்து வெளியேறியது பற்றி பத்திரிகைகளில் வந்த செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்தச் சட்ட மன்றத்தில் நடைபெற்ற ஓர் நிகழ்ச்சி பற்றி எங்களுக்கு ஏற்பட்டுள்ள, ஒரு சந்தேகத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் விளக்கிக் கூறவேண்டும், தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக பத்திரிகைகளில் வந்துள்ள சில செய்திகளும் எங்களுடைய குழப்பத்தை மேலும் வளர்த்து இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சில உறுப்பினர்கள் இந்த அவையை விட்டு வெளியேறி

னார்கள். அப்போது அவர்கள் வெளிநடப்புச் செய்கிறார்களா அல்லது சிற்றுண்டி அருந்துவதற்காக வெளியே செல்கிறார்களா என்பது எங்களுக்குப் புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இன்று காலை பத்திரிகைகளிலும், நேற்று மாலை பத்திரிகைகளிலும் 'Vazhapadi Group Stages walk out', 'walk-out by Vazhapadi Group' என்று செய்திகள் வந்திருக்கின்றன. நேற்று மாலை பத்திரிகைகளில் ஒரு பத்திரிகையில் சட்டசபையில் காங்கிரஸ் வெளிநடப்பு என்ற செய்தி முதல் பக்கத்திலேயே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-05

பொதுவாக ஒரு சட்டமன்றமானாலும், நாடாளுமன்றமானாலும் வெளிநடப்பு என்பது ஒரு கட்சி செய்கிற ஒரு செயல். ஒரு கட்சி வெளிநடப்பு செய்கிறது என்று சொன்னால் அந்தக் கட்சியின் சட்டமன்றத் தலைவர் அல்லது நாடாளுமன்றத் தலைவர் 'நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்' என்று அறிவித்துவிட்டு, அந்தக் கட்சியின் சட்டமன்றத் தலைவர் தலைமையேற்று தன்னுடைய உறுப்பினர்களை வெளியே அழைத்துச் செல்வார். ஆனால் நேற்று காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சில உறுப்பினர்கள் எழுந்து சென்றார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, அவர்கள் எதற்காகச் செல்கிறார்கள் என்பது நேற்று எங்களுக்குப் புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் நேற்று மாலைப் பத்திரிகைகளிலும், இன்று காலை வந்த பத்திரிகைகளிலும், சில பத்திரிகைகளில் காங்கிரஸ் வெளிநடப்பு செய்தது என்று செய்தி வெளிவந்துள்ளது. சில பத்திரிகைகளில் 'Vazhapadi group staged walk out' என்று போட்டிருக்கிறார்கள். இதில்தான் எங்களுக்கு குழப்பமும், சந்தேகமும் எழுந்துள்ளது. ஏனென்றால் ஒரு சட்டமன்றத்தில் ஒரு உறுப்பினர் உள்ள கட்சி என்று சொன்னால், அவர் ஒரு தனி நபராக எழுந்து வெளியே வெளிநடப்பு செய்யலாம். இரு உறுப்பினர்கள் இருக்கின்ற ஒரு சட்டமன்றக் கட்சியாக இருந்தாலும் அவர்கள் இருவரும் எழுந்து சென்றால் தான் அது வெளிநடப்பு ஆகும். பல உறுப்பினர்கள் இருக்கின்ற ஒரு சட்டமன்றக் கட்சி என்னும்போது, சட்டமன்றத்தில் உள்ள அந்தக் கட்சியின் தலைவர்தான் வெளிநடப்பு செய்கிறோம் என்று அறிவிக்கவேண்டும். அப்போதுதான் அது வெளிநடப்பு ஆகும். எனவே எங்களுக்கு எழுந்துள்ள இரண்டு சந்தேகங்களை பேரவைத் தலைவர் அவர்கள் தெளிவுபடுத்தவேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று நடைபெற்றது வெளிநடப்பா? உங்களுடைய விடை 'ஆம்' எனில், அப்படி என்றால் பிரதான எதிர்க் கட்சியான காங்கிரஸ் இரண்டாக உடைந்துவிட்டதா அல்லது

இன்றும் ஒரே கட்சியாக இருக்கிறதா என்பதைத் தாங்கள் தெளிவு படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவையிலே எழுப்பியிருக்கிற பிரச்சினை மிகவும் சிந்தனைக்கு உரிய ஒரு பிரச்சினை என்பதை எல்லா உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்வார்கள் (மேசையைத்தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு ஏன் இந்த சந்தேகம் வந்தது என்று சொன்னால், வெளிநடப்பு என்று சொல்லிவிட்டு சிலர் வெளியேறிய பிறகு பிரதான எதிர்க் கட்சியான காங்கிரஸின் சட்டமன்ற கட்சித்தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இங்கேயே அமர்ந்திருந் தார்கள். இன்னும் சில காங்கிரஸ் உறுப்பினர்களும் இங்கே அமர்ந்திருந்தார்கள். எங்களைப் பொறுத்தமட்டிலும், சட்ட மன்றத்தைப் பொறுத்தமட்டிலும், ஒரு எதிர்க்கட்சிதான் இருக்கிறது, பிரதான எதிர்க்கட்சி காங்கிரஸ் கட்சி என்று தான் இவ்வளவு நாளும் நாங்களும் எண்ணிக்கொண்டிருந்தோம். வாழப்பாடி கோஷ்டி என்றோ, மூப்பனார் கோஷ்டி என்றோ, இரண்டு கட்சிகள் இருப்பதாக எங்களுக்கு இதுவரை தகவல் இல்லை. எனவே இன்னும் காங்கிரஸ் கட்சி ஒரே கட்சியாக இருக்கிறதா அல்லது இரண்டாக உடைந்து விட்டதா என் பதைத் தாங்கள் தெளிவுபடுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிற இந்தப் பிரச்சினை களுக்கு சில பதிலுரைகளை நான் தெரிவித்துத்தான் ஆக வேண்டும். பொதுவாக, நான் பல்வேறு நேரங்களில் அவையின் வேண்டுகோளாகவும், என்னுடைய செய்தி ஆகவும் தெரிவித்து வந்திருப்பது பத்திரிகைகள் செய்திகளை வெளியிடுகிறபோது, இங்கே நடந்த நிகழ்ச்சிகளை, ஏற்றுக்கொள்ளப்பட்ட புர சீடிங்ஸை, வெளியிடுவதுதான் மரபாகக் கொள்ளவேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து வந்து இருக்கிறேன். அதற்கு அடுத்தும் கட்சிகளைப் பற்றி குறிப்பிடுகிற போது எந்தெந்த கட்சி பேரவையால் அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறதோ, எந்தப் பெயர் அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறதோ அந்தப் பெயர்களைத் தான் கூப்பிடவேண்டும் என்றும் நான் கேட்டு வந்திருக்கிறேன்.

முதலாவதாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதைப் போல, பத்திரிகைகளில் வாழப்பாடி கோஷ்டி என்றோ மூப்பனார் கோஷ்டி என்றோ அண்மைக்

3 பிப்ரவரி 9] [பேரவைத் தலைவர்]

காலமாக சட்டமன்ற காங்கிரஸ் கட்சியிலுள்ள உறுப்பினர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது சில பத்திரிகைகள் குறிப்பிட்டு வருவது கண்டிக்கத்தக்கதாகும். இங்கே ஒரே கட்சிதான் இருக்கிறது. காங்கிரஸ் கட்சி என்று. அந்தக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே அமர்ந்து இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் பெயரைப் பயன்படுத்தி ஒரு செய்தியை வெளியிடுகிறபோது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்த அந்த அளவுக் கருத்தைத்தான் வெளியிடுவது என்பதை மரபாகக் கொள்ளவேண்டும். அது தவிர நேற்றைய தினம் வெளிநடப்பு என்று வரவேண்டும் என்று சொன்னால், அவை நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு இந்தப் பிரச்சினையை எழுப்பி இதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்று வெளிநடப்பு செய்கின்ற உரிமை ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் உண்டு.

அப்படி யாரேனும் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் 'வெளிநடப்பு' என்று சொல்லிவிட்டு வெளியேறி இருப்பார்களேயானால் அது வெளிநடப்பு. சில உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள் என்று போட்டிருக்கலாம். அந்த வகையிலே இங்கே அவையில் நடைபெறவில்லை. நடவடிக்கைக் குறிப்புகள் என் கையில் இருக்கிறது—எந்த உறுப்பினரும் நான் வெளிநடப்பு செய்கிறேன் என்று சொல்லிவிட்டு வெளிநடப்பு செய்ததாக அவைக் குறிப்பில் எத்தகைய செய்தியும் இடம்பெறவில்லை. எனவே, வெளிநடப்பு என்று வெளியிலே செய்திகள் போட்டிருப்பது தவறான செய்தி என்பதை நான் குறிப்பிட விரும்புகிறே அத்தகைய செய்திகளை வெளியிடுகிறபோது பத்திரிகைகள் தவிர்க்கவேண்டும். நேற்றைய தினம் இங்கே வெளிநடப்பு என்று சொல்லிவிட்டு யாரும் வெளிநடப்பு செய்யவில்லை என்பதைத்தான் இங்கே அவையில் அனைவரும் இருந்து கண்ட செய்தியாகும்.

முற்பகல் 11-10

எனவே, வெளிநடப்பு என்கிற செய்தி நேற்றையதினம் இங்கே வெளியிடப்பட்டிருப்பது தவறாகும். மேலும், இந்த குரூப், அந்த குரூப் என்று போடுவதும், பத்திரிகைகள் தவறான ஒரு முன்மாதிரியை உண்டாக்குகிறார்கள் என்றுதான் பொருள். அவ்வாறு போடுவதைத் தவிர்க்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சி இரண்டாக உடைந்து விட்டதா என்ற ஒரு பெரிய வினாவை என்னிடத்திலே கேட்டிருக்கிறார்கள். பேரவைத் தலைவரைப் பொறுத்த

TRUTH ALONE TRIUMPHS

மட்டில் அத்தகைய குறிப்பு ஏதும், எனக்கு வரவில்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று அவையில் நடைபெற்ற சமபவம் குறித்து முதலமைச்சர் அவர்கள் இங்கே ஒரு கேள்வியை எழுப்பினார். சிலர் வெளியே போனார்கள். பலர் இங்கே அமர்ந்து இருந்தார்கள். வெளிநடப்புதானா? 'வெளிநடப்பு' என்றால் கட்சித் தலைவர் அல்லவா எழுந்து கூறியிருக்க வேண்டும் என்றார்கள். இங்கே பிரச்சினையை சிலர் எழுப்பினார்கள். 5 பேர் கவனஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்திருந்தார்கள். என்னைக் கேட்டால் அது கவன ஈர்ப்புத் தீர்மானமாக கூட அல்ல, ஒரு 'ஸ்பெஷல் மென்சன்' ஆக அல்லது 'அட்ஜர்ன் மென்ட் மோசன்' ஆக கூட கொடுத்திருக்க வேண்டும். நாள் கடந்து விட்டது. ஸ்பெசல் மென்சனாக கொண்டு வந்திருக்கலாம். அவர்கள் எழுப்பிய வேகத்தில், எழுப்ப அனுமதிக்கப்படவில்லை. உடனே அவர்கள் வெளியே சென்றார்கள். (It is a communication gap.) அதற்கு மேலே நான் பெரிது படுத்த விரும்பவில்லை. கட்சியே இரண்டாக பிளந்து விட்டதா என்று முதல்வர் அவர்கள் கேட்டார்கள். கட்சி காங்கிரஸ் கட்சி ஒன்றாகவே இருக்கிறது. பலம் பொருந்திய கட்சியாக இந்த அவையிலே (மேசையைத் தட்டும் ஒலி) அது செயல்படும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதே போல சில ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே இந்த அவையிலே ஒரு பிரச்சினை வந்திருக்கிறது. அண்ணா அவர்கள் இந்த அவையிலே உறுப்பினராக இருந்தபோது, அன்றைய தினம் அவை முன்னவராக இருந்த எங்கள் ஊர் சி.எஸ்.அவர்கள் ''திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்த பிளவைப் பற்றி எனக்குத் தெரியாதா ?'' என்று கேட்டார். அண்ணா அவர்கள் சொன்னதைத்தான் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். 'அருள் கூர்ந்து நீங்கள் பெரியவர்கள். பெரிய இடத்திலே இருக்கிறீர்கள். எனக்குத் தெரியாதா ? இதுபோல என்றெல்லாம் பேசுவது, ஒரு கட்சியிலே இருக்கின்ற சிறிய மனவேறுபாடுகளை பெரிது படுத்தி அவையிலே இந்தக் கட்சி இரண்டாகப் பிளவு பட்டுவிட்டதா, இப்படி ஆகி விட்டதா? அப்படி ஆகி விட்டதா ? என்றெல்லாம் பேசுவது முறையாக இருக்குமா ' என்று நான் உங்களையே கேட்க விரும்புகிறேன். அது முறையல்ல. இந்த அவையிலே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற மரபு. (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணா அவர்களே எடுத்துக் காட்டி, சி.எஸ். அவர்கள் இனிமேல் மீண்டும்..... (குறுக்கீடுகள்) என்ன, என்ன பேசுகிறீர்கள் ? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகிரி அவர்கள் வார்த்தைகளை இவ்வளவு வேகமாக விடக் கூடாது. (குறுக்கீடுகள்) அழகிரி அவர்கள் வார்த்தைகளை வேகமாக விடக்

கூடாது. (குறுக்கீடுகள்) அமருங்கள். எதிர்க் கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, அழகிரி பேசுவது எப்படிச் சரியாகும் ? (குறுக்கீடுகள்) நீங்கள் இப் பொழுது பேசுகிறீர்களே, அது சரியா ? உட்காருங்கள். எல் லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து மற்ற உறுப்பினர்கள் அமர வேண்டும். எதிர்க் கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, அங்கே யாரும் சொல்லவில்லை. தயவு செய்து உறுப்பினர்கள் அனை வரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து எல்லா உறுப்பினர்களும் உட்கார வேண்டும். எதிர்க் கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார். தயவு செய்து உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எதிர்க் கட்சித் தலைவர் பேசட்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வரதன் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) தயவு செய்து வரதன் உட்கார வேண்டும். எல்லோரும் உட்கார்ந்து விட்டார்கள். (குறுக்கீடு கள்) இல்லை நீங்கள் நின்று கொண்டு இந்தத் தரப்பிலே இருக்கிற உறுப்பினர்களைப் பார்த்து கை நீட்டிக்கொண்டு இருப் பது முறையா ? வரதன் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) எதிர்க் கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார். உட்கார வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விட்டுவிடுங்கள், உட்காருங்கள்.

முற்பகல் 11.15.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஜனநாயக இயக்கத்தில் கருத்து வேறுபாடு களுக்கு இடமுண்டு. அனைத்துக் கட்சிகளிலேயேயும் கருத்து வேறுபாடுகள் இருந்திருக்கின்றன. (குறுக்கீடு) தெரியும். உங்கள் கட்சியிலே திருநாவுக்கரசு எங்கேயிருந்து வந்தார். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். (குறுக் கீடு) தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) ஓர் உறுப்பினர், எங்கள் கட்சியிலே அத்தகைய கருத்து வேறுபாடு கிடையாது என்கிறார். அதற்கு எல்லா உறுப்பினர்களும் எழுந்தால் எப்படி ? அதற்கு எதிர்க் கட்சித் தலைவர் பதில் சொல்வார். (குறுக்கீடு) எல்லோரும் உட்கார வேண்டும். (குறுக்கீடு) இது முறையல்ல. எதிர்க் கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கிற போது எங்கள் கட்சியிலே அத்தகைய கருத்து வேறுபாடு கிடை யாது என்று ஓர் உறுப்பினர் சொன்னார், அதற்கு எழுந்தால் எப்படி ? பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்பதற்காக எழுந்து நிற்கக் கூடாது. (குறுக்கீடு) இது முறையல்ல. (குறுக் கீடு) ஓர் உறுப்பினர் வேறு ஏதாவது தவறான வார்த்தைகளைப்

பயன் படுத்தி இருந்தால் எழுந்திருக்காலம். (குறுக்கீடு) எங்கள் கட்சியிலே கிடையாது என்று ஓர் உறுப்பினர் எழுந்து உரக்கச் சொல்கிறார். (குறுக்கீடு) இல்லை, அதைவிடக் கடுமையாகப் பேசியிருக்கிறார்கள். (குறுக்கீடு) ஏதாவது பிரச்சினையைத் உண்டாக்க வேண்டுமென்று நீங்கள் நினைத்தால் இப்படி எழுந் திருக்கலாம். (குறுக்கீடு) எங்கள் கட்சியிலே கிடையாது.... (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கும்போது எல்லா கட்சிகளிலேயும் இத்தகைய கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன என்று சொன்னவுடன், ஓர் உறுப்பினர் எழுந்து எங்கள் கட்சியில் இல்லை என்று சொன்னதற்கு எல்லா உறுப் பினர்களும் எழுந்தால் எப்படி? (குறுக்கீடு) இதிலே விவாதம் நடத்த முடியாது. (குறுக்கீடு) அதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுவார்கள். நான் யாரையும் குறை சொல்ல வில்லை என்று அவர் அடுத்து சொல்வார். (குறுக்கீடு) இல்லை, இல்லை.

எழுந்து ஒன்றைச் சொன்னதற்கே எல்லா உறுப்பினர்களும் எழுந்தால்—(குறுக்கீடு) அப்படியானால் ஆளுங்கட்சித் தரப்பிலே யாரும் பேசக்கூடாது என்று விரும்புகிறீர்களா? (குறுக்கீடு) ஏற் கெனவே ஒரு முறை திரு. அழகிரி எழுந்து ஒரு குரல் கொடுத்தார். அது ஒரு விவாதப் பொருளானது. இப்போது எதிர்க்கட்சித் தலைவர் சொன்னவுடன் இந்தத் தரப்பிலிருந்த ஓர் உறுப்பினர் சொன்னது, எங்கள் கட்சியில் இல்லை—இதுதான் சொன்னது. (குறுக்கீடு) இதைச் சொல்வதற்கு எப்படி ஓர் உறுப்பினருக்கு உரிமை இல்லை என்று சொல்ல முடியும்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைதவறி நான் எதையும் பேச வில்லை. எந்தக் குற்றச்சாட்டையும் நான் சுமத்தவில்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எங்கள் கட்சியில் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). அதனால்தான் நான் ஒரு கருத்தைச் சொல்லுகின்ற போது எங்கள் கழகத்தைச் சார்ந்த, எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் இங்கே கட்டுப்பாட்டுடன் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). நான் பேசுகின்ற போது இடை மறித்து எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் எவரும் பேச மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). நான் கேட்டதெல் லாம், நேற்று இங்கே அவையிலே நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றி பத்திரிகைகளில் வந்த செய்தியைப் பார்த்து எங்களுக்கு ஒரு சந்தேகம் எழுந்திருக்கிறது. நேற்று நடைபெற்ற நிகழ்ச் சியை அவைக் குறிப்புகளில் தாங்கள் எப்படி குறிப்பிடப் போகி றீர்கள் என்பதைத்தான் கேட்டேன். ஏனென்றால் நேற்று சிலர் வெளி நடப்பு செய்வதாக அறிவித்து விட்டு, வெளியே சென்றிருக்கிறார்கள். ஆனால் அந்தக் கட்சியின் தலைவர் வெளி நடப்பு என்று அறிவிக்கவும் இல்லை, அவரும் இன்னும்

1993 பிப்ரவரி 9] [டாக்டர். ஜெ. ஜெயலலிதா]

சிலரும் இந்த அவையிலேயே அமர்ந்திருந்தார்கள். எனவே நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றி ஒரு விளக்கம்தான் நான் கேட்டேன். அவர்கள் கட்சியில் இத்தனை முரண்பாடு கள், கான்ட்ரடிக்ஷன்ஸ் இருந்தால், எங்கள்மீது ஏன் கோபப் படுகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டது பேரவைத் தலைவரைத்தான். நீங்கள் இதை எப்படிக் குறிப்பிடப் போகிறீர்கள், பத்திரிகைகள் இப்படி சில செய்திகளை வெளியிட்டிருக்கின்றன என்று பேர வைத் தலைவரைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் என்ற முறையில் பத்திரிகைகள் சில செய்திகள் வெளி யிட்டிருப்பது தவறு என்று சொல்லியிருக்கிறேன். காங்கிரஸ் கட்சி இங்கே ஒரே கட்சியாகத்தான் இருக்கிறது, எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலேதான் இருக்கிறது என்பதையும் தெரி வித்திருக்கிறேன். அதற்கு மேற்கொண்டு இதை விவாதப் பொருளாக நீட்டித்துக்கொண்டு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றே கருதுகிறேன். அவர்கள், கட்சி இரண்டாக உடைந்து விட்டதா என்று கேட்டதற்கும், எத்தகைய செய்தியும் அதுபோன்று எனக்கு வரவில்லை என்பதையும் சொல்லியிருக்கி றேன். பத்திரிகையாளர்களுக்கு வேண்டுகோளாக, காங்கிரஸ் கட்சியினுடைய ஒருசில குறிப்பிட்ட உறுப்பினர்களை இந்தக் கோஷ்டி, அந்தக் கோஷ்டி என்று வெளியிடுவதைத் தவிர்க்கு மாறும் வேண்டுகோளாக விட்டிருக்கிறேன். அதோடு பிரச்சி னையை முடித்துவிடலாம்.

முற்பகல் 11-20.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நேற்று ஒரு சாரார் வெளிநடப்பு செய்யவில்லை, பத்திரிகைகள் தவறான செய்திகளை வெளியிட்டு இருக்கின்றன என்று தாங்கள் இப்போதுதான் கூறியிருக்கி றீர்கள். அப்படியானால் மாண்புமிகு உறுப்பினர் திரு. தண்டாயுதபாணி அவர்களும், அவருடைய நண்பர்களும் இங்கிருந்து வெளிநடப்பு செய்யவில்லை என்பதை ஒத்துக்கொள் வார்களா? அதற்கு மறுப்பு வெளியிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) — முறை தவறி பேசினார்கள் என்று நான் குறிப்பிடவில்லை. (குறுக்கீடு) ஒரு ஜனநாயக இயக்கத்தில் கருத்து வேறுபாடுகள் இருப்பது சகஜம் என்று தான் சொன்னேன். அதற்கே கோபப்பட்டு அந்தத் தரப்பிலேயிருந்து சத்தம் போட்டார்கள். எங்கள் கட்சியிலே

கருத்து வேறுபாடுகள் இல்லையென்று சொன்னார்கள். இன்றைய தினம் ராஜாராம் உங்களுடைய கட்சி உறுப்பினராக இல்லை. வெளியேற்றப்பட்டிருக்கிறார். (குறுக்கீடு).. அதற்குப் பெயர்தான் ..(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் ஜெ ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் கட்டுப் பாட்டை ஒருவர் மீறினால் அவரை வெளியேற்றும் தைரியம் எங்களுக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). அவர்கள் கட்சியில் கட்டுப்பாட்டை மீறுபவர்களை வெளியேற்றும் தைரியம் அவர்களுக்கு இருக்கிறதா? (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைத் தவிர்க்க முடியாது. மற்ற உறுப்பினர்கள் யாரும் எழுந்து நிற்கக் கூடாது. (குறுக்கீடுகள்) மேசையைத்தட்டி ஆரவாரம் செய்வது வேறு, எழுந்து நிற்பது வேறு. தயவுசெய்து எழுந்து நிற்கக்கூடாது. எதிர்க்கட்சித் தலைவர் பேச எழுந்திருக்கிறார். மற்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்சிக் கட்டுப்பாட்டை மீறினால் வெளியேற்றும் தைரியம் எங்களுக்கு இருக்கிறது என்று முதல்வர் அவர்கள் சொன்னார்கள். எங்கள் கட்சி யிலும் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதாகத் தலைமை கருதுமே யானால் எவ்வளவு பெரிய மனிதனாக இருந்தாலும் கட்சியை விட்டு வெளியேற்றத் தயங்க மாட்டோம் என்பதைக் கூறிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இப்போது நான் தெளிவாகவே சொல்லியிருக்கிறேன். நேற்றைய தினம் நடை பெற்ற சம்பவம், It is a communication gap. Not more than that, எனவே அதை வைத்துக்கொண்டு, கட்சிக்குள்ளே, பிளவா, இரண்டு கோஷ்டிகளா. சட்டசபைக்குள்ளே, இரண்டு கோஷ்டி கள் இருக்கின்றனவா என்ற கேள்விகளுக்கு இடமில்லை. அது போன்ற கேள்விகளுக்கு இடம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. எனவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை இத்தோடு முடித்து விடலாம். சி. எஸ். அவர்களுக்கு அண்ணா அவர்கள் சொன்ன பதிலையே மீண்டும் நினைவுபடுத்தி, அருள்கூர்ந்து இது போன்று நீங்கள் பெரிதுபடுத்துவது முறையல்ல என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும்.